Nic-Mail (07)
05/Jan/22
02:38PM

A2
05/01/22

தமிழ்நாடு மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநரின் செயல்முறைகள் – சென்னை – 6

நக.எண். 0022 / அ1 / 2022-1 நாள் 04.01.2022

---

பொருள் : பள்ளிக்கல்வி – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 27.11.2021 அன்று நடைபெற்ற பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் (போக்சோ) சட்டம், 2012 இன் செயல்பாடுகள் குறித்துக் கூட்டக் குறிப்புகள் – கூட்டத்தின் குறிப்பு – அறிவுரை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை : அரசு கடித எண். 26879/பொது1(2)/2021-1, நாள். 27.12.2021

---

பார்வையில் காணும் கடிதத்தின்படி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 27.11.2021 அன்று நடைபெற்ற பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் (போக்சோ) சட்டம், 2012 இன் செயல்பாடுகள் குறித்துக் கூட்டம் நடைபெற்றது. அதில் அறிவுறுத்தியப்படி, தங்கள் ஆளுகைக்குட்பட்ட அனைத்து மெட்ரிகுலேசன் / மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளிகளில் ஒவ்வொரு வகுப்பறையிலும் 1098 சிறார் உதவி எண் குறித்த விவரங்கள் கண்டிப்பாக ஒட்டப்பட உடன் உரிய நடவடிக்கை மேற்கொள்ள அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் அறிவுறுத்தலாகிறது.

முதன்மைக் கல்வி அலுவலர் / மாவட்டக் கல்வி அலுவலர், பள்ளி ஆய்வின் போது மற்றும் பள்ளி பார்வையின் போது சிறார் உதவி எண் எவ்வித சேதாரமுமின்றி ஒட்டப்பட்டுள்ளதை உறுதி செய்யப்பட வேண்டும். மேலும், பள்ளியில் மாற்றுத் திறன் கொண்ட மாணாக்கர் மற்றும் பார்வையற்ற மாணாக்கர் எவரேனும் இருந்தால் பள்ளி பார்வையின் போது ஆய்வு அலுவலர்கள் அவர்களிடத்தில் சிறார் உதவி எண் விவரத்தினை அவர்களுக்கு புரியும்படி எடுத்துரைக்க வேண்டும்.

5/1/2022

மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநர்

பெறுநர்
முதன்மைக் கல்வி அலுவலர்கள்,
அனைத்து மாவட்டம்.

05 01 2022

நகல்
சென்னை – 09, தலைமைச் செயலகம், பள்ளிக் கல்வித் துறை அரசு முதன்மைச் செயலாளர் அவர்களுக்கு தகவலுக்காகப் பணிந்து அனுப்பலாகிறது.

D:\ML\A1\common.docx